ஸங்க்ராந்தி பூஜை
கோ பூஜை



ஸ்ரீவத்ஸ. வெ. ஸோமதேவ சர்மா

வெளியீடு : பவானி புக் சென்டர்

19, ஸ்டேஷன் ரோடு, மேற்கு மாம்பலம், சென்னை - 600 033

விலை ரூ. 1-50

ஸங்க்ராந்தி பூஜையும் கோ பூஜையும்

(சரித்திரத்துடன் கூடியது)

★

ஆசிரியர் :

ஸ்ரீவத்ஸ. வெ. ஸோமதேவ சர்மா

ஸ்ரீ ராம ஜயம்
மார்கழி 19 [illegible]
[illegible]

★

பவானி புக் சென்டர்
19, ஸ்டேஷன் ரோடு,
மேற்கு மாம்பலம், சென்னை - 600 033.
1981

விலை ரு. 1-00



ஸங்க்ராந்தி பூஜா மஹிமை

ஸூர்யன் மேஷம் முதலிய ராசிகளில் ப்ரவேசிப்பது ஸங்க்ராந்தி எனப்படும். ஸங்க்ரமணம் என்ருலும் இதே பொருள்தான். ஒவ்வொரு ராசியிலும் புகும்போது மேஷ ஸங்க்ரமணம், வ்ருஷப ஸங்க்ரமணம் என்று பெயர். 12 ஸங்க்ரமணங்களும் புண்ய காலங்களே. அச்சமயம் ஸ்நானம், பித்ரு தர்ப்பணம், ஜபம், தானம் முதலியவை களைச் செய்தால் மற்ற நாட்களில் செய்வதைவிட அதிக பலனைத் தரும். பன்னிரண்டு ஸங்க்ராந்திகளிலும் தர்ப் பணம் செய்ய முடியாதவர்கள் சித்திரை வருஷப்பிறப்பு, தக்ஷிணாயன புண்ய காலம், துலாவிஷு புண்யகாலம், உத்தராயன புண்யகாலம் என்ற நான்கு காலத்திலேனும் அவச்யம் தர்ப்பணம் செய்யவேண்டும். உத்தராயணம் என்பது தை மீ முதல் ஆனி மீ முடியும்வரை ஆறுமாதம். மற்ற ஆறுமாதம் தக்ஷிணாயனமாகும். இவ்விரண்டும் சேர்ந்து தேவர்களுக்கு ஒரு நாளாகும். தேவரின் பகல் காலமான உத்தராயணத்தில்தான் உபநயனம், விவாஹம் முதலிய சுபகாரியங்களைச் செய்யவேண்டும். இறப்பது கூட உத்தரா யணமானுல் நல்லது. தக்ஷிணாயனத்தில் இறந்தால் ப்ராயச் சித்தம் செய்யவேண்டும்.

தேவர்களுக்குப் பகல் ஆரம்பமான தை மாதப்பிறப்பு மிக விசேஷ புண்யகாலம் ஆகும். மகர ஸங்க்ராந்தி புருஷனைப் பற்றி, வருஷ பலனும் பஞ்சாங்கத்தில் கூறப்படும். அந்த தினத்தைப் பொங்கல் பண்டிகை என்பர். அதற்கு முந்திய திநம் போகிப் பண்டிகை, பொங்கலுக்கு அடுத்த நாள் மாட்டுப் பொங்கல் அல்லது நாட்டுப் பொங்கல் என்பர். இது வருஷப் பிறப்பைப் போலாம். சிலர் புது வஸ்த்ரம் அணிவர்.

வீட்டிலுள்ள பழைய வஸ்துக்களை அப்புறப்படுத்தி, புதிய வஸ்துக்களை வாங்குவர். கிராமங்களில் திண்ணை சுவருக்கு செம்மண் வெள்ளைப் பட்டை அடித்து, மூன்று நாளும் தெருவில் பெரியதாகக் கோலம் போடுவர்.

போகிப் பண்டிகையும் ஸங்க்ராந்தியும்

மார்கழி மாதம் கடைசிநாள் மங்களஸ்நாநம் செய்து; ஸகல கறிகாய்களையும், பக்ஷணங்களையும் செய்து, பகவானுக்கு அளித்துச் சாப்பிடுவர். சிலவிடங்களில் அன்று அதிகாலையில் வீட்டிற்கு எதிரே தீ மூட்டி எரிப்பார்கள். பீடை மாதத்தின் கடைசி தினத்தில் வீட்டிலுள்ள பழைய பாய், வஸத்ரம், ஓலை முதலியவைகளைத் தீயிலிட்டால், பழையவைகளிலிருந்த நோய்க் கிருமிகள் அழிந்துவிடும். முன்பு எங்கும் நடப்பது போல் கோகுலத்தில் ஸங்க்ராந்தியில் 3 நாள் தேவேந்திரனைப் பூஜிக்க ஆரம்பித்தனர். ஸ்ரீகிருஷ்ணன், இந்த்ரனது கர்வத்தை அடக்க இந்த்ர பூஜையை நிறுத்தி, கோ ப்ராம்மணர்களைப் பூஜிக்ககும்படிச் செய்தார். இந்த்ரன் கோபங்கொண்டு ஏழுநாள் உக்ரமாக மழைபொழிந்தார். ஸ்ரீகிருஷ்ணன் கோவர்த்தன மலையைக் குடையாகப்பிடித்துப் பசுக்களையும் யாதவர்களையும் காப்பாற்றினர். கோலோகத்திலிருந்து காமதேனு வந்து பசுக்களைக் காத்த கிருஷணனுக்குக் கோவிந்தராஜ பட்டாபிஷேகம் செய்தாள். கர்வம் அகன்று, தான் செய்த குற்றத்தை மன்னிக்கும்படி வேண்டினன் சக்ரன்.

இந்த்ரன் போகத்தை அனுபவிப்பதில் சிறந்தவன் ஆதலால் சிறந்த போகத்தைத் தேவேந்த்ர போகம் என்பது பழக்கம். இந்த்ரனுக்குச் சிறப்பாகப் பூஜைசெய்து வந்த தினமே போகிப் பண்டிகை என நல்ல சாப்பாடு நடக்கிறது. இந்த்ரனுக்குத் தம்பியாக அவதாரம் பண்ணின வாமநரை உபேந்த்ரன் என்பார்கள். தேவேந்த்ரன் விரும்பியபடி அவன் தனிப்பூஜையை நிறுத்தி இந்த்ர உபேந்த்ரனுடன் சேர்ந்து ஸங்க்ராந்தியில் ஸூர்யநாராயண பூஜையும் மறுநாள் கோ பூஜையும் நடக்கிறது.

ஸூர்யனை நித்யம் காயத்ரியாலும் ஸூர்ய நமஸ்காரத்தாலும் உபாஸித்து ஸ்ரீராமர் ராவணனை ஜயித்தார். ஸூர்யனை உபாஸித்துப் பாண்டவர் அக்ஷய பாத்ரம் பெற்றனர். ஸத்ராஜித் என்ற அரசன் அவரை உபாஸித்து 20 பாரம் தங்கத்தைக் கக்கும் ஸ்யமந்தக மணியைப் பெற்ருர். ஸாம்பன் என்ற கிருஷ்ணனுடைய புத்ரன் ஸூர்ய உபாஸனையால் குஷ்டரோகத்தை அகற்றிக் கொண்டான். "ஸவித்ரு மண்டல மத்ய வர்த்தீ நாராயண:" ஸூர்ய மண்டலத்தின் நடுவில் நாராயணன் இருக்கிருர் என்றும் "ஸௌர மண்டல மத்யஸ்தம் ஸாம்பம்" ஸூர்ய மண்டல மத்தியில் இருப்பவர் பரமசிவன் என்றும் புராணங்கள் வர்ணிக்கின்றன. ஆரோக்யத்தை அளிப்பவர். நவக்ரஹத்தில் முதல்வர் ஆதித்யன். அத்தகைய சூர்ய நாராயணனை இந்த்ரோபேந்த்ரருடன் ஸங்க்ராந்தி பூஜை செய்ய வேண்டும். தை மாதம் பிறந்தவுடன் பொங்கல் பானை கழுத்தில் மஞ்சள் கொத்து கட்டி, அது பொங்கும்போது பொங்கலோ பொங்கல் என்பர்.

கோ மஹிமையும் பூஜையும்

பாற்கடலிலிருந்து காமதேனு தோன்றினுள். அவளுடைய ஸந்ததி இருக்கும் லோகம் கோ லோகம் எனப்படும். ராதா கிருஷ்ணர் அங்கு கோக்களுடனும் கோபிகைகளுடனும் ஆநந்தமாக வஸிக்கின்ருர். அந்த தேனுவின் ஸந்ததியே பூலோகத்தில் கோக்களாக இருக்கின்றன. அந்த கோக்களின் பாலினுலும் நெய்யினுலும் வேதமந்த்ரத்தைக் கூறி வேதியர் யாகம் செய்கின்றனர். யாகத்தினுல் மழை, மழையால் உலக க்ஷேமம். ஆதலால் எங்கும் "கோப்ராம்மணேப்ய; சுபமஸ்து" நித்யம், கோவுக்கும் பிராம்மணருக்கும் க்ஷேமமுண்டாகட்டுமென்று வேண்டப்படுகிறது. பகவான் கோப்ராம்மணஹிதர் எனப்படுகிருர். பசு காமதேனு அம்சமானதால் அதன் ஒவ்வொரு பாகமும் மனிதருக்குப் பேருபகாரம் செய்வது ப்ரஸித்தம். நம் உடல் வளர பால், தயிர், மோர், புத்தி வளர வெண்ணெய், நெய், பயிர் வளர சாணி, மூத்ரம் நம்மைப்

பாவநமாக்க பஞ்சகவ்யமும், பகவானுடைய அபிஷேகத்திற்கு பால் முதலியவைகளும் பயன்படுகின்றன. உடலுக்கும் உயிருக்கும் உபயோகமான கோவைப்போல் உதவுகிறவள் தாய் ஒருவளே. ஆதலால் கோமாதா எனப்படுகிருள்.

காலையில் எழுந்தவுடன் எவருடனும் பேசாமல் ஒரு பிடி புல் பசுவுக்குக் கொடுத்தால் மலடிகூட குழந்தையைப் பெறுவாள், கோதானத்தைவிட உயர்ந்த தானம் வேறு இல்லை. ஆதலால் கல்யாணத்திலும் இதர கார்யத்திலும் கோதானம் செய்யவேண்டுமென தர்ம சாஸ்த்ரம் கூறுகிறது. ஜலத்தில் தவம் செய்துகொண்டிருந்த ஒரு மஹரிஷியை மீன் என செம்படவர் வலையால் இழுத்துக் கரையில் கொண்டு வந்தனர். முநிவர் எனத் தெரிந்தபின் வருந்தி மன்னிப்புக் கேட்டனர். முநிவர் அவர்களைப் பார்த்து அந்த தேச அரசனிடம் சென்று தனக்கேற்ற பொருள்களை வாங்கிக்கொண்டு தன்னிடம் காட்டிப்போகும்படிக் கூறினர். தன்னை மத்ஸ்யம் என்று எண்ணி தான் மத்ஸ்யமில்லாததால் ஏமாந்த செம்படர், கஷ்டத்திற்கு ஈடாகத் தனம் பெறும்படிச்சொன்னர். அவ்வரசன் ஆயிரம் ரூபாய் தந்தான். முனிவர் நான் இவ்வளவுதான பெறுவேன் என்று அரசனைக் கேள் என்ருர். பதிஞயிரம் தந்தான். அப்பொழுதும் அப்படியே சொன்னர். லக்ஷம், கோடி, பாதி ராஜ்யம், முழு ராஜ்யம் முதலியவைகளை ஒன்றன்பின் ஒன்ருக அரசன் அளித்தான். அப்பொழுதும் இந்த ரிஷி இவ்வளவுதான பெறுவேன்? என்ருர். கவிஜாதர் என்ற முனிவர் வந்து, ராஜன்! கன்றுடன் ஒரு பசுவை அளி! என்ருர். அப்படிச் செய்தபொழுது முநிவர் எழுந்து. இந்தக் கோவின் பதிஞறில் ஓர் அம்சத்திற்குக்கூட நான் ஸமமல்ல என்ருர். ஒரு கோ ஸமஸ்த ராஜ்யத்தையும் விடச் சிறந்த தல்லவா?

ஸகல தேவர்களும் பசுவினது சரீரத்தில் வந்து தங்கினர். லக்ஷ்மீதேவி சிறிது நேரம் கழித்து வந்து, தானும் வஸிக்க இடம் கேட்டாள். நீ சஞ்சல குணம் உள்ளவள் ஆதலாலும்

இங்கு இடம் எல்லாம் நிறைந்துவிட்டதாலும் உமக்கு இட மில்லை என்ருள் கோதேவி. லக்ஷ்மிதேவி அவளைக் கெஞ்சி, சின்னதாக இருந்தாலும், ஒருவருக்கும் பயன்படாததாக இருந்தாலும் அந்த இடம் தனக்குப் போதும் என்ருள். ஜல மலம் விடும் இடம்தான் இருக்கிறதென ஸ்ரீதேவி அங்கே தங் கினுள். ஆதலால் காலையில் எழுந்தவுடன் கோவின் பின் புறத்தைத் தரிசிக்கவேண்டும். கோதானம் செய்யும்போது கோவின் வாலை உருவியே தானம் கொடுக்கவேண்டும். இத் தகைய கோவை நித்யம் நாம் பூஜிக்க வேண்டும். அதற்கு ஆஹாரம் கொடுத்த பின்பே நாம் உண்ண வேண்டும். அதிதி அகப்படாத திநத்தில் கோவுக்கு அன்னமளிக்க வேண்டும். அத்தகைய கோக்களைப் பகவான் க்ருஷ்ணன் ஆதரித்ததால் கோபாலன் எனப்படுகிருர். கோவின் பாத தூளி மேலே பட்டால் வாயவ்ய ஸ்நானம் செய்த புண்யமாகும்.

கோதூளி பட்ட அன்னத்தைச் சாப்பிடாமல் தூரே எறிந்த பாபத்தால் ஒரு சிறந்த ஸன்யாஸி கைசிகன் என்ற சண்டாளனுகப் பிறந்தார். கோவுக்குப் பணிவிடை செய்து திலீப மஹாராஜன் ரகுவைப் பெற்ருன். கோவை பிரதக்ஷிணம் செய்யாமல் போகக் கூடாது. அதற்கு எதிரில் ஜலமலம் கழிக்கக் கூடாது. திலீபன் வழியில் இருந்த கோவை ப்ரதக்ஷி ணம் செய்யாததால் குழந்தை பிறக்காமல் போயிற்று. அதை அறிந்து கோபூஜை செய்தே புத்ர பாக்யம் பெற்ருன். திலீபனது அச்வமேதக் குதிரையைத் தூக்கிச் சென்று தேவேந்த்ரன் மாயையால் மறைந்தான். அச்வத்தை ரக்ஷிக்கச் சென்ற ரகு மஹாராஜன் கோமயத்தினுல் கண்ணைத் துடைத்துக்கொள்ள தேவேந்த்ரன் மாயை அகன்று அவனுள்ள இடம் தெரிந்தது. கோவின் பின்புறத்தைத் தொட்டுக் கண்ணில் ஒத்திக் கொண் டால் கங்கா ஸ்நாந பலன் உண்டாகும். ஸகல ஸம்பத்தையும் தரும் கோமாதாவை வருஷத்திற்கு ஒரு முறையேனும் விதிப் படி பூஜை செய்ய வேண்டாமா? (உபாத்யாயரைத் தேடாமல் நாமே ஸங்க்ராந்தி பூஜை, கோ பூஜை செய்துக் கொள்ளும் படி இரண்டு பூஜையும் எல்லோருக்கும் பயன்பட தமிழில்

வெளியிடுகிறோம். (தவறின்றி முதலில் படித்துக் கொண்டு பிறகு இதைப் பார்த்துப் பூஜை செய்து பிறகு தக்ஷிணையை உபாத்யாயருக்குக் கொடுத்துவிடவும்.)

ஸங்க்ராந்தி பூஜை.

ஸ்நாநம் செய்து மடி உடுத்தி க்ருஹஸ்தராளுல் கச்சம் கட்டிக் கொண்டு கால் அலம்பி நெற்றிக்கிட்டு ஆசமநம் செய்து பூஜை ஆரம்பிக்க வேண்டும். ஸூர்ய கிரணம் விழும் படியான இடத்தில் தாழ்வாரம் அல்லது முற்றத்தில் பச்சை அரிசி மாவிளுல் தேர்போல் கிழக்கு நுனியாகக் கோலம் போட்டு வடக்கு புரத்தில் அரிசி மாவால் ஸூர்யனைப் போல் அமைத்து அதன் அருகில் குங்குமத்தால் பாதி சந்த்ரனைப் போல் அமைத்து பூஜை ஆரம்பிக்கவும். மஞ்சள் பொடியால் விக்நேச்வரரைச் செய்து நிர்விக்நமாக ஸூர்ய நாராயண பூஜை நடக்க முதலில் விக்நேச்வர பூஜை செய்யவேண்டும்.

ஓம் சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம் ப்ரஸன்ன வதநம் த்யாயேத் ஸர்வ விக்னோப சாந்தயே ॥ ஓம் பூ.........பூர்ப்புவஸ்ஸுவரோம் — என்று ப்ராணுயாமம் செய்து வலது துடைமீது இடது கையைக் கீழே வைத்து ஸங்கல்பம் செய்யவேண்டும்.

மமோபாத்த ஸமஸ்த துரித க்ஷயத்வரா ஸ்ரீபரமேச்வர ப்ரீத்யர்த்தம் கரிஷ்ய மாணஸ்ய கர்மண: அவிக்நேந பரிஸமாப்த்யர்த்தம், ஆதௌ விக்நேச்வர பூஜாம் கரிஷ்யே. ஜலத்தைத் தொட்டு கையை அலம்பி அக்ஷதையை எடுத்து— அஸ்மின் பிம்பே ஸுமுகம் விக்நேச்வரம் த்யாயாமி — என்று மஞ்சள் பிள்ளையார் மீது போடுக.

விக்நேச்வரம் ஆவாஹயாமி — அக்ஷதை போடுக.

விக்நேச்வராய நம: ஆஸநம் ஸமர்ப்பயாமி ,,

,, பாதயோ: பாத்யம் ஸமர்ப்பயாமி (தனி பாத்திரத்தில் உத்தரணி தீர்த்தம் விடுக)

,, ஹஸ்தயோ: அர்க்யம் ஸமர்ப்பயாமி

,, ஆசமநீயம் ,,

,, ஸ்நாநம் ,,
(புஷ்ப ஜலத்தால் ப்ரோக்ஷிக்கவும்)

,, ஸ்நாநாநந்தரம் ஆசமநீயம் ஸ-மி (ஜலம் விடு)

விக்நேச்வராய நம: கந்தான் தாரயாமி (சந்தந மிடுக)

,, வஸ்த்ரார்த்தம் அக்ஷதான் ஸமர்ப்பயாமி
(அக்ஷதை போடு)

,, உபவீதார்த்தம் அக்ஷதான் ,,

,, கந்தோபரி ,, ,,

,, புஷ்பை: பூஜயாமி (புஷ்பம் போடுக)

புஷ்ப அர்ச்சனை

ஓம்	ஸுமுகாய	நம:	ஓம்	கணாத்யக்ஷாய	நம:
,,	ஏக தந்தாய	,,	,,	பால சந்த்ராய	,,
,,	கபிலாய	,,	,,	கஜாநநாய	,,
,,	கஜகர்ணகாய	,,	,,	வக்ர துண்டாய	,,
,,	லம்போதராய	,,	,,	சூர்ப கர்ணாய	,,
,,	விகடாய	,,	,,	ஹேரம்பாய	,,
,,	விக்நராஜாய	,,	,,	ஸ்கந்த பூர்வஜாய நம:	
,,	விநாயகாய	,,	,,	விக்நேச்வராய நம:	
,,	தூம கேதவே	,,	,,	விக்னேச்வராய நம:	

,, நாநாவித பத்ர புஷ்பாணி ஸமி.

,, தூபார்த்தம் அக்ஷதான் ஸமர்ப்பயாமி.
(அக்ஷதை போடுக).

,, தீபார்த்தம் ,, (தீபம் காட்டுக).

வாழைப்பழத்தை நகத்தால் கிள்ளாமல் கொஞ்சம் உரித்து நாம் பரிசேஷனம் செய்வதுபோல் நிவேதனம் செய்க. ஓம் பூர்ப்புவஸ்ஸுவ; நிவேதந வஸ்துவை ஜலத்தால் சுற்றுக. தத்ஸ விதுர்வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி தீயோ யோந: ப்ரசோதயாத் — ப்ரோக்ஷிக்கவும். தேவஸவி தப்ரஸுவ—மற்றோர் முறை ஜலத்தால் சுற்றுக. ஸத்யம் த்வர்த்தேந பரிஷஞ்சாமி.

அம்ருதோபஸ் தரணமஸி — ஒரு உத்தரணி ஜலம் விடுக: புஷ்பத்தை எடுத்து நிவேதந வஸ்துவுக்குக் காட்டி 5 முறை ஸ்வாமியிடம் காட்டி முடிவில் ஸ்வாமி மீது போடுக. ப்ராணு யஸ் வாஹா, வ்யாநாய ஸ்வாஹா, உதாநாயஸ்வாஹா, ஸமா நாயஸ்வாஹா: ப்ரும்மணே ஸ்வாஹா — விக்நேச்வராய நம: கதலீபலம் நிவேதயாமி. வெல்லமானுல் குளோபஹாரம் நிவேதயாமி, விக்நேச்வராய நம: நைவேத்யாநந்தரம் ஆசம நீயம் ஸமர்ப்பயாமி. உத்தரணி தீர்த்தம் விடுக.

அம்ருதாபிதாநமஸி-பூர்புவஸ்ஸுவ: தாம்பூலத்தில் ஒரு பொட்டு ஜலம் விட்டு.

பூகீபல ஸமாயுக்தம் நாகவல்லீ தளைர்யுலம் ।
கர்பூர சூர்ண ஸம்யுக்தம் தாம்பூலம் ப்ரதிக்ருஹ்யதாம் ॥

விக்நேச்வராய நம: கர்பூர தாம்பூலம் ஸமர்ப்பயாமி.
,, மந்த்ர புஷ்பம் ,,
,, ஸர்வோபசாரான் ,,

வக்ர துண்ட மஹாகாய ஸூர்யகோடி ஸமப்ரப ।
அவிக்நம் குரு மே தேவ ஸர்வ கார்யேஷு ஸர்வதா ॥

இதைக் கூறி ப்ரார்த்தனை செய்து — சூர்ய பூஜை ஸங்கல்பம் செய்க.

ஓம்...சுக்லாம் சாந்தயே. ஓம் பூ:...பூர்பவஸ்ஸுவரோம், மமோபாத்த.........ப்ரீத்யர்த்தம் சுபே சோபனே முகூர்த்தே ஆத்யப்ரும்மண: த்விதீய பரார்த்தே ச்வேதவராஹ கல்பே வைவஸ்வத மன்வந்தரே அஷ்டாவிம்சதி தமே கலியுகே

ப்ரதமே பாதே ஜம்பூத்வீபே பாரதவர்ஷே பரதகண்டே மேரோ: தக்ஷிணே பார்ச்வே சகாப்தே அஸ்மின் வர்த்தமாநே வ்யாவ ஹாரிகே ப்ரபவாதி ஷஷ்டி ஸம்வத்ஸராணும் மத்யே (அந்தந்த வருஷத்தின் பெயர் பக்ஷம் திதி வாரம் நக்ஷத்ரம் இவைகளைக் கூறுக.) ...... நாமஸம்வத்ஸரே உத்தராயணே ஹேமந்த ரிதௌ மகரமாஸே ...... பக்ஷே ...... சுபதிதௌ ...... வாஸர யுக்தாயாம் ...... நக்ஷத்ர யுக்தாயாம் சுபயோக சுபகரண ஏவம் குண விசேஷண விசிஷ்டாயாம் அஸ்யாம்... ஸகுடும்பஸ்ய மம ஸர்வாபீஷ்ட ஸித்யர்த்தம் சாயா ஸம்க்ஞா ஸமேத ஸ்ரீஸூர்ய நாராயண இந்த்ரோபேந்த்ர பிரஸதா ஸித்யர்த்தம் ஆயுஷ்மத் ஸத்ஸந்தாந ஸம்ருத்யர்த்தம் ஆரோக்யாதி ஸமஸ்த ஸம்பத் பிராப்த்யர்த்தம் இந்த்ரோபேந்த்ர ஸஹித ஸூர்ய நாராயண பூஜாம் கரிஷ்யே. ஜலத்தைத் தொட்டு விட்டு — விக்நேச்வரம் யதாஸ்தாநம் ப்ரதிஷ்டாபயாமி. க்ஷேமார்த்தே புனராகமனாய ச — என்று விக்நேச்வரர் மீது அக்ஷதையைப் போட்டுச் சிறிது வடக்கே நகர்த்தி அந்த புஷ்பாக்ஷதைகளைத் தலையில் தரிக்கவும்.

கலச பூஜை

பஞ்சபாத்திரத்திற்கு நாலு புறமும் சந்தனமிட்டு உள்ளே ஒரு புஷ்பத்தைப் போட்டு வலது கையால் மூடிக் கொண்டு கீழ்வரும் சுலோகங்களைக்கூறி அந்த புஷ்பத்தால் பூஜா த்ரவ்யங்களையும் தன்னையும் ப்ரோக்ஷிக்க வேண்டும்.

கலசஸ்ய முகே விஷ்ணு: கண்டே ருத்ர; ஸமாச்ரித: ।
மூலே தத்ர ஸ்திதோ ப்ரும்மா மத்யே மாத்ருகணாஸ்ம்ருதா:॥

குக்ஷௌது ஸாகரா: ஸர்வே ஸப்தத்வீபா வஸுந்தரா ।
ரிக்வேதோத: யஜுர்வேத: ஸாமவேதோப்யதர்வண: ॥

அங்கைஸ்ச ஸஹிதா: ஸர்வே கலசாம்பு ஸமாச்ரிதா; ।
கங்கே ச யமுனே சைவ கோதாவரி ஸரஸ்வதி ॥
நர்மதே ஸிந்து காவேரி ஜலேஸ்மின் ஸன்னிதிம் குரு ॥

மணி அடிக்க மந்த்ரம்

ஆகமார்த்தந்து தேவானும்—கமனார்த்தந்து ரக்ஷஸாம் ।
குரு கண்டாரவம் தத்ர தேவதாஹ்வாந லாஞ்சநம் ॥

என்று கூறி மணியை அடிக்கவும்.

ஸூர்யம் ஸுந்தரலோக நாதம் அமிருதம் வேதாந்த ஸாரம் சிவம் க்ஞானம் ப்ரும்ம மயம் ஸுரேசம் அமலம் லோகைக சித்தம் ப்ரபும் । இந்த்ராதித்ய நராதிபம் ஸுரகுரும் த்ரைலோக்ய சூடாமணிம் பிரும்மா விஷ்ணு சிவ ஸ்வரூப ஹிருதயம் வந்தே ஸதா பாஸ்கரம் ॥ இந்த்ரோபேந்த்ர ஸஹிதம் ஸூர்யநாராயணம் த்யாயாமி.

ஸௌர மண்டல மத்யஸ்தம் ஸாம்பம் ஸம்ஸார பேஷஜம் நீலக்ரீவம் விருபாக்ஷம் — நமாமி சிவமவ்யயம் ॥

இந்த்ரோபேந்த்ர ஸஹிதம் ஸூர்யநாரயணம் — ஆவாஹயாமி. (ஆஸத்யேன என்ற மந்த்ரத்தைக் கூறி ஆவாஹநம் செய்யலாம்:)

இ-த.	மித்ராய நம:	ஆஸனம்	ஸமர்ப்பயாமி
,,	ரவயே ,,	பாத்யம்	,,
,,	ஸூர்யாய ,,	அர்க்யம்	,,
,,	பாநவே ,,	ஆசமநீயம்	,,
,,	ககாய ,,	ஸ்நாநம்	,,

ஆபோஹிஷ்டா என்ற மந்த்ரத்தைக்கூறி ப்ரோக்ஷிக்கவும் ஸ்நாநாநந்தரம் ஆசமநீயம் ஸமர்ப்பயாமி

இ-த,	பூஷ்ணே நம:	வஸ்த்ரம்	,,	அக்ஷதை
,,	ஹிரண்யகர்ப்பாய	உபவீதம்	,,	,,
,,	மரீசயே ,,	ஆபரணம்	,,	,,
,	ஆதித்யாய,,	கந்தம்	,,	சந்தனம்
,,	ஸவத்ரே ,,	அக்ஷதான்	,,	அக்ஷதை

புஷ்பார்ச்சனை.

ஓம் அர்க்காய	நம:	ஓம் ஆதி பூதாய	நம:
,, பாஸ்கராய	,,	,, அநந்தாய	,,
,, திவாகராய	,,	,, விச்வரூபாய	,,
,, தீப்தாய	,,	,, ஹ்ரீம் ஸுப்ரஸன்னய	,,
,, ஸஹஸ்ர நேத்ராய	,,	,, ஹிரீம் ஸம்பத்கராய	,,
,, ஆதி மத்ய அந்த ரஹிதாய	,,	,, இஷ்டார்த்த தாய	,,
		,, ஆத்மரூபிணே	,,
,, க்ரஹாணும் பதயே	,,	,, ஸ்கல ஜகதாம் பதயே	,,
,, தேஜோரூபாய	,,	,,	
,, ஆதித்யாய	,,	,, ஆர்த்த ரக்ஷாய	,,

ஓம் அச்யுதாய	நம:	ஓம் வாமனாய	நம:
,, அநந்தாய	,,	,, ஸ்ரீதராய	,,
,, கோவிந்தாய	,,	,, ஹ்ரிஷிகேசாய	,,
,, கேசவாய	,,	,, பத்மநாபாய	,,
,, நாராயணாய	,,	,, தாமோதராய	,,
,, மாதவாய	,,	,, சாயாயை	,,
,, கோவிந்தாய	,,	,, ஸம்க்ஞாயை	,,
,, விஷ்ணுவே	,,	,, ஸுவர்ச்சலாயை	,,
,, மதுஸூதநாய	,,	,, இந்த்ராய	,,
,, த்ரிவிக்ரமாய	,,	,, உபேந்த்ராய	,,

இ-த. சாயாஸம்க்ஞா ஸமேத ஸூர்ய நாராயண ஸ்வாமிநே நம:
நாநாவித பத்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி.

இ-த. பாஸ்கராய நம:- தூபம் ஆக்ராபயாமி. (தூரஸி தெரிந்தவர் கூறுக.)

இ-த. கர்மஸாக்ஷிணே நம:- தீபம் தர்சயாமி (சர்க்கரைப் பொங்கல்)

இ-த. குடோதந பிரியாய நம: குடோதநம். இக்ஷீதண்டம் (கரும்பு) ஆர்த்ரகம் (இஞ்சி) ஹரித்ரகம் (மஞ்சள்) நாளிகேரகண்டத்வயம் (தேங்காய்மூடி) கதலீபலம் (வாழைப்பழம்) மாஷாபூபம் (வடை) திவ்யான்னம் நிவேதயாமி. (நிவேத்ய வஸ்துக்கள் மீது ஒவ்வொரு புஷ்பத்தைப்போட்டு முன்பு விக்நேச்வர பூஜையில் கூறியபடி நிவேதனம் செய்யவும்

பூகீபல......க்ருஹ்யதாம் - தாம்பூலம் ஸமர்ப்பயாமி.

இ-த. புஷ்கராக்ஷாயா நம: நீராஜநம் ,,
(ஸோமோவா தெரிந்தவர் சொல்லலாம்)

இ-த. வேத வேதாந்த தத்வக்ஞாய நம:- மந்த்ர புஷ்பம் ஸமர்ப்பயாமி.

இரு கரங்களாலும் புஷ்பத்தை எடுத்து நின்று கொண்டு போடவும். (யோபாம் புஷ்பம். வேதம் தெரிந்தவர் கூறுக)

இ-த. ஸூர்ய நாராயண ஸ்வாமிநே நம:- ப்ரதக்ஷிணம் ஸமர்ப்பயாமி.

யாநிகாநிச பாபாநி ஜன்மாந்தர க்ருதாநிச ।
தாநி தாநி ப்ரணச்யந்தி ப்ரதக்ஷிண பதே பதே ॥
ஜயது ஜயது ஸூர்ய: ஸப்த லோகைகதீப: ।
கிரண தஹித தாபம் க்லேச துக்கஸ்ய நாசம் ॥
அருண ககந கம்யம் ஆதிம் ஆதித்ய மூர்த்திம் ।
பரம பரம ரூபம் பாஸ்கரம் தம் நமாமி ॥ (நமஸ்காரம்.)

பிரார்த்தனை

பாநோபாஸ்கர மார்த்தாண்ட சண்ட ரச்மே திவாகர ।
ஆயுராரோக்யம் ஐச்வர்யம் புத்ர பௌத்ராம் ச தேஹிமே ॥

அக்ஷதையைத் தீர்த்தத்துடன் கீழ்வரும் சுலோகத்தைச் சொல்லி பூமியில் விடவும்.

காயேந வாசா மநஸேந்த்ரியைர்வா புத்யாத்மநாவா ப்ருக்தே: ஸ்வபாவாத் । கரோமியத்யத் ஸகலம் பரஸ்மை நாராயணயேதி ஸமர்ப்பயாமி ॥ இந்த்ரோபேந்த்ர ஸஹிதம் ஸூர்ய நாராயணம் யதாஸ்தாநம் ப்ரதிஷ்டாபயாமி என்று உத்வாஸநம்.

மஞ்சள் இலையில் சர்க்கரைப் பொங்கலைக் கொஞ்சம் எடுத்து வைத்துப் பாலைவிட்டுக் கலந்து எல்லோரும் கொஞ்சம் எடுத்துப் பொங்கலோப் பொங்கல் என வீட்டுக் கூறைமீது இறைப்பது வழக்கம்.

ஸங்க்ராந்தி பூஜை முற்றிற்று.

கோ பூஜை

மறுநாள் காலையில் முன்சொன்னபடி ஆசாரத்துடன் விக்நேஸ்வர பூஜை செய்துவிட்டு கோபூஜைக்கு ஸங்கல்பம் செய்யவேண்டும்,

ஓம் சுக்லாம்...... சாந்தயே. ஓம்பூ:...... ஸுவரோம்.. மமோபாத்த... ப்ரீத்யர்த்தம் — சுபே சோபனே முகூர்த்தே ஆத்யப்ரும்மண: த்விதீய பரார்த்தே ச்வேதவராஹ கல்பே வைவஸ்வத மந்வந்தரே அஷ்டாவிம்சதிதமே கலௌ யுகே ப்ரதமே பாதே ஜம்புத்வீபே பாரதவர்ஷே பரதகண்டே மேரோ: தக்ஷிணே பார்ஸ்வே சகாப்தே அஸ்மின் வர்த்தமானே வ்யாவஹாரிகே ப்ரபவாதி ஷஷ்டி ஸம்வத்ஸராணும் மத்யே...... நாம ஸம்வத்ஸரே உத்தராயணே ஹேமந்தரிதௌ மகர மாஸே...... பக்ஷே..... யாம் சுபதிதௌ ......வாஸர யுக்தாயாம்...... நக்ஷத்ர யுக்தாயாம் சுபயோக சுபகரண ஏவங்குண விசேஷணவிசிஷ்டாயாம் அஸ்யாம்...... யாம் சுபதிதௌ. கவாம் ஸம்பதாம்ச அபிவிருத்யர்த்தம் கோ-பூஜாம் கரிஷ்யே, ஜலத்தைத் தொட்டு, ஸாதுவான பசு இருந்தால் அதற்கு ஷோடசோபசார பூஜை, இல்லையேல் பசுவைப்போல் கோலம்போட்டு அதில் பூஜை செய்து நைவேத்ய அன்னத்தையும் தாம்பூலத்தையும் ப்ரத்யக்ஷப் பசுவிற்கு அளிக்கவும்.

காமதேனு ஸமுத்பூதே ஸர்வ காம பலப்ரதே । த்யாயாமி ஸௌரபேயித்வாம் — வ்ருஷபத்நி நமோஸ்துதே । காம் த்யாயாமி ஆவாஹயாமி தேவேசி — ஹவ்ய கவ்ய பலப்ரதே—வ்ருஷபத்நி நமஸ்துப்யம்: சுப்ரீதா வரதா பவ காம் ஆவாஹயாமி. வ்ருஷபத்ந்யை நம:- ஆஸநம் ஸமர்ப்பயாமி, கவே நம:- பாத்யம் ஸமர்ப்பயாமி – காமதேநவே நம:- அர்க்யம் ஸமர்ப்பயாமி. ஸௌரபேய்யை நம:- ஆசமநீயம் ஸமர்ப்பயாமி. வத்ஸதர்யை நம.- ஸ்நானம் ஸமர்ப்பயாமி. ஸர்வ பலதாயின்யை நம:- வஸ்த்ரம் ஸமர்ப்பயாமி. பயஸ்வன்யை நம: — ஆபரணம் ஸமர்ப்பயாமி மஹாலக்ஷ்ம்யை நம: — கந்தான் தாரயாமி, குங்குமம் ஸமர்ப்பயாமி. சபளாயை நம: — புஷ்பாணி ஸமர்ப்பயாமி.

ஓம் காமதேநவே	நம.	ஓம்	மஹாலக்ஷ்ம்யை	நம:
,, சத்ருசூநாயை	,,	,,	ஹவ்யகவ்ய பலப்ரதாயை	,,
,, சபாளாயை	,,			
,, கவே	,,	,,	காம்போஜ ஜநகாயை	,,
,, ஸௌரபேய்யை	,,	,,	பப்ல ஜநகாயை	,,
,, வத்ஸதர்யை	,,	,,	யவன ஜனகாயை	,,
,, ஸாவகாம-	,,	,,	வ்ருஷபத்ன்யை	,,
,, பலப்ரதாயை	,,	,,	க்ஷீரதாரிண்யை	,,

கவே நம: நாநாவித பத்ரபுஷ்பாணி ஸமர்ப்பயாமி.
கவே நம: தூபம் ஸமர்ப்பயாமி. தூரஸி — கவே நம:
தீபம் ஸமர்ப்பயாமி. உத்தீப்யஸ் — கவே நம: நைவேத்யம்
ஸமர்ப்பயாமி.

முன்போல் எல்லாம் செய்து பசுவுக்கு அளிக்கவும். அல்லது வாழைப்பழமாவது கொடுக்கவும்.

கவே நம: கற்பூர நீராஜனம் ஸமர்ப்பயாமி
(ஸோமோவா கூறவும்.)
கவே நம: மந்த்ரபுஷ்பம் ஸமர்ப்பயாமி
(பிரதக்ஷிண நமஸ்காரம்.)

பிரார்த்தனை

க்ஷீராப்தி தநயே தேவி — வஸிஷ்டாதி ப்ரபூஜிதே ।
கோதநம் ஸ்ரீதநம்சாபி புஷ்டிம் புத்ராம் ச தேஹிமே ॥

சத்ர சாம்ராதி ஸமஸ்தோபசாரான் ஸமர்ப்பயாமி.
காயேனவாசா — ஸமர்ப்பயாமி.

கோமயத்தினால் ஒரு பிம்பம் செய்து கோ பூஜையுடன் சேர்த்து இந்த்ர பூஜை செய்வர் சிலர்.

ஸ்ரீரஸ்து.

ஸ்ரீ சுரபி பிரிண்டர்ஸ், மேற்கு மாம்பலம், சென்னை-33.

Printed at: Sri Surabhi Printers, West Mambalam, Madras-33